

நகர் ஊரமைப்பு துறை

கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம்

சோழவரம் ஊராட்சி / கிராமம்

வேலூர் மாவட்டம்/ வட்டம் , கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம், சோழவரம் ஊராட்சி/ கிராமம், சர்வே எண்கள்: 38/6பி1, 6சி, 6டி –ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்பம் எண் : LZXA5IJ6
அளவு : 1 : 400
கோப்பு எண் : VLR / LZXA5IJ6 / 070 - 2023

வ

குறிப்பு :

மனைப்பிரிவின் பரப்பு : 7590.00 ச.மீ. (அ) 1.87 ஏக்கர்
கோரிய மனைகள் : 43
ஒதுக்கிய மனைகள் : 43
மனைப்பிரிவின் எல்லை :
நிலையிலுள்ள சாலை :

பொது ஒதுக்கீடு :

உத்தேச சாலை :
மனைப்பிரிவின் பரப்பு : 7590.00 ச.மீ. (அ) 1.87 ஏக்கர்
மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகளின் பரப்பு :

மனைப்பிரிவின் மொத்த பரப்பு	–	உத்தேச சாலைகளின் பரப்பு		
(7590.00 ச.மீ.	–	2295.15 ச.மீ.)	=	5294.85 ச.மீ.

10 % பூங்கா பொது ஒதுக்கீட்டுக்கு ஈடாக அரசின் வழிகாட்டி மதிப்பீட்டு கட்டணம் ரூ.79087/– நாள்.05.08.2023–ல் செலுத்தப்பட்டுள்ளது.

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது :

பொது உபயோகம் (PP)	: 34.42 ச.மீ.	- 0.65 %
TANGEDCO ஒதுக்கீடு	: 34.93 ச.மீ.	- 0.65 %
உத்தேச சாலை மற்றும் மூலை முடக்கு	: 2295.15 ச.மீ.	- 30.24 %

உத்தேச சாலை	மூலை முடக்கு
7.20 மீ சாலைகளுக்கு	1.50 x 1.50 மீ.
9.00 மீ சாலைகளுக்கு	1.50 x 1.50 மீ.

நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்று தலைவர், சோழவரம் ஊராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. அரசாணை எண் : 134 ந.நி (ம) கு.வ.துறை நாள்: 29.09.2002–ன் படி சாலைகள் ஒதுக்கீட்டினை மாநகராட்சிக்கு மனுதாரரால் தானமாக ஒப்படைப்பு செய்யப்படவேண்டும். மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு நில உரிமைக்கு மாநகராட்சியே பொறுப்பு என்பதுடன் மாநகராட்சியினால் வழங்கப்பட்ட நில உரிமை சான்றின் அடிப்படையிலேயே இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு துணை ஆணையர், சென்னை – 2 அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றமின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'0" * 4'0" அளவிலான நிரந்திர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்திரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. மனுதாரர் மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள், பூங்கா மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகளை வருவாய் உட்பிரிவு செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
7. அரசாணை எண்.161, நாள்.09.12.2020–ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களை தவறாமல் அனுசரிக்கப்பட வேண்டும்.
8. தம்[illegible]டு ஒருங்கிணைப்பு கட்டிட விதி எண்.47 பகுதி – 3(A)–ல் " When it is intended to serve up to ten [illegible] length of the passage does not exceed 100 metres - The passage will remain private." என்ற [illegible]ப்படையில் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.

Signature Not Verified
Signed by: Joint Direct[illegible]
Location:Vellore
Date:2023.08.09 17:02:43

ம. வ. / மா. ந. ஊ. அ. (வே.மா.) எண் : 64/ 2023

உதவி இயக்குநர் /இணை இயக்குநர்(முகூபொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.